# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க,
# பொது வசதிகள் சபை (திருத்தச்) சட்டம்

---

*[1982, டிசெம்பர் மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, டிசெம்பர் மாதம் 31 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 20* *தபாற் செலவு : சதம் 50*

# 1982 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, பொது வசதிகள் சபை (திருத்தச்) சட்டம்

[1982, திசெம்பர் மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஓ. 36/81
1458

1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, பொது வசதிகள் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, பொது வசதிகள் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திமூன்றும் ஆண்டின் 10 ஆம் இலக்க, பொது வசதிகள் சபைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு, பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(i) அதன் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (அஅ) உண்ணாட்டிலாயினுஞ்சரி, வெளிநாட்டிலாயினுஞ்சரி, ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகளையும் அத்துடன் விருப்பாவணக் கொடைகளையும் பெறுதல் ;" அத்துடன்

(ii) அதன் (எ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

" (எஎ) அரசின் சார்பில் அல்லது ஏதேனும் உள்ளூராதிகார சபையின் சார்பில் நிருமாண வேலையை மேற்கொள்ளுதல் ;".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.